# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 340/மா/2023**
**நாள் : 6.1.2024**

திரு. S. பிரேம்குமார்,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்-4, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, எண்ணூர், காசி விஸ்வநாதன் கோவில் குப்பம், 5வது தெரு, எண்.1/NA என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. பிரேம்குமார் என்பவரின் 27.10.2023 நாளிட்ட மனு 30.10.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 340/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, எண்ணூர், காசி விஸ்வநாதன் கோவில் குப்பம், 5வது தெரு, எண்.1/NA என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. பிரேம்குமார் என்பவரின் 27.10.2023 நாளிட்ட மனுவில்

"நான் பணிவுடன் சமர்பிப்பதாவது: சென்னை – 600 081, மண்டலம் - 04, வார்டு-41, தண்டையார் பேட்டை, குமரன் நகர், 3வது கதவு எண்.8/86 என்ற இடத்தில் சென்னை மாநகராட்சியிடம் எந்த விதமான கட்டிட அனுமதியில்லாமல் தரைதளத்துடன் (G+3) மூன்று மாடி குடியிருப்பு கட்டிடம் கட்டியது தொடர்பாக நான் பலமுறை புகார் அளித்தும் இதுவரை சென்னை மாநகராட்சி மண்டலம்-04ன் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை.

2. கடந்த இரண்டு வருடத்திற்கு முன்பு கொடுக்கப்பட்ட புகாருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் அளித்தார்கள். தற்போதும் இதே

பதிலைத்தான் அளித்துள்ளார்கள். மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் கட்டி மூன்று வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் நடவடிக்கைகள் மட்டும் எடுக்கவேயில்லை.

3. நான் அறிந்த வகையில் மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்தின் உரிமையாளர் உள்ளூர் செல்வாக்கு மிக்கவர் என்பதால் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் இலஞ்சம் பெற்றுக்கொண்டு மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள் என தெரிய வருகிறது.

4. நான் மிகவும் பணிவுடன் சமர்ப்பிப்பதாவது: இத்துடன் நான் மாநகராட்சி அதிகாரிக்கு அனுப்பிய எனது எழுத்துப்பூர்வமான புகார் கடிதம் நாள்:10.07.2023 மனுவின் நகல் மற்றும் இணையதள புகார் மனுவில் நகல் (2023-205LGN) ஆகியவற்றை இணைத்து அனுப்பியுள்ளேன். ஆகவே ஐயா அவர்கள் எனது புகார் மனுவை கோப்பில் எடுத்து விசாரணை செய்து மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் மீதும், அதன் மீது தற்போது வரை நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீதும் சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென தங்களை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**2. இம்முறைமன்ற கடித நாள் 6.11.2023 வாயிலாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 4ன் அலுவலரிடம் இம்மனுமீது அறிக்கை கோரப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் மண்டல அலுவலர் தன்னுடைய 24.11.2023 நாளிட்ட அறிக்கையில் :**

மனுதாரர் குறிப்பிட்ட புகார் தொடர்புடைய சென்னை, கொருக்குப்பேட்டை, குமரன் நகர் முழுவதும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமானது. இவ்விடத்தினை அனுபவிப்பவர் / இவ்விடம் ஒதுக்கப்பட்டவர்கள் மட்டுமே இங்கு கட்டமைப்பு அமைக்க இயலும். குமரன் நகரில் கிட்டத்தட்ட 300 முதல் 400 குடும்பங்கள் வசிக்கின்றனர். இவ்விடத்தில் எவரேனும் கட்டிட வரைபட அனுமதி பெற வேண்டும் என்றால், இவ்விடத்திற்கான விற்பனைப் பத்திரம், பகிர்வுப் பத்திரம், விடுவிப்பு பத்திரம் அல்லது செட்டில்மெண்ட் பத்திரம், பட்டா, சுமைச்சான்றிதழ், கட்டுமானத்தின் வரைபடம் போன்ற ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். கட்டாய ஆவணங்களைச் சரிபார்த்து, முன்மொழியப்பட்ட திட்டம் நடைமுறையில் உள்ள விதிகளுடன் ஒருங்கிணைந்ததா என்பதை சரிபார்த்த பிறகு, திட்ட அனுமதி வழங்கப்படும், மேலும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு மட்டும் சென்னை, கொருக்குப்பேட்டை, குமரன் நகரில் உள்ள நிலத்தின் மீது உரிமை உள்ளது. இவ்விடத்தினை அனுபவிப்பவர்/இவ்விடம் ஒதுக்கப்பட்டவர்கள் மட்டுமே இங்கு கட்டமைப்பு அமைக்க இயலும் மாற்றாக திட்ட அனுமதிக்கு விண்ணப்பிக்க இயலாது. கதவு எண்.8/86, குமரன் நகர் 3வது தெரு, கொருக்குப்பேட்டை, சென்னை – 600 021 என்ற முகவரியில் உள்ள கேள்விக்குரிய கட்டிடம், மண்டல அலுவலர்களால் கடந்த 15.11.2023 அன்று கள ஆய்வு செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து 16.11.2023 தேதியில் கட்டிடத்தின் உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர ஊரமைப்புச் சட்டம், 1971 பிரிவு 56 (1) மற்றும் 57 R/W பிரிவு 85ன் படி பணி நிறுத்த தாக்கீது / அனுமதிக்கப்பட்ட திட்ட வரைபடத்தினை சமர்ப்பிக்குமாறு தாக்கீது வழங்கப்பட்டுள்ளது.

எனவே மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவம் இப்பதிலை ஏற்றுக்கொள்ளுமாறு தங்களை பணிந்துகேட்டுக்கொள்ளப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

**3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 12.12.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 12.12.2023 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோர் 12.12.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர்.**

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை கொருக்குப்பேட்டை, குமரன் நகர் 3வது தெரு கதவு எண் 8/86ல் கட்டப்பட்டுள்ள கட்டடம் குறித்து நேரில் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கு 16.11.2023 அன்று பணி நிறுத்த தாக்கீது மற்றும் அனுமதிக்கப்பட்ட திட்ட வரைபடத்தினை சமர்ப்பிக்குமாறும் மேலும் 11.12.2023 அன்று பூட்டி சீல் வைக்கும் தாக்கீதும் வழங்கப்பட்டுள்ளது எனவும், இதனையொட்டி, சம்பந்தப்பட்ட கட்டடத்தின் மீது தொடர் நடவடிக்கை இன்னும் ஒரு மாத காலத்தில் எடுக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இந்நேர்வில், மனுதாரரின் மனு, எதிர்மனுதாரரது அறிக்கை மற்றும் எதிர் மனுதாரர்களது வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன:**

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4, வார்டு 41, தண்டையார்பேட்டை, குமரன் நகர், 3வது கதவு எண் 8/86 என்ற இடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் அனுமதியின்றி தரைத்தளத்துடன் மூன்று மாடி குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்டது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ல் புகார் அளித்தும், மூன்று வருடங்களுக்கு மேல் ஆகியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எனவே விதிமீறி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீதும், நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட விதிமீறி கட்டப்பட்ட குடியிருப்பு பகுதி கொருக்குப்பேட்டை குமரன் நகர் முழுவதும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமானது என்றும், இவ்விடத்தில் எவரேனும் கட்டிட வரைபட அனுமதி பெறவேண்டுமென்றால் இவ்விடத்திற்கான விற்பனைப் பத்திரம், பகிர்வுப் பத்திரம், விடுவிப்பு பத்திரம் அல்லது செட்டில்மெண்ட் பத்திரம், பட்டா, சுமைச்சான்றிதழ் கட்டுமானத்தின் வரைபடம் போன்ற ஆவணங்களைச் சமர்ப்பித்த பின்னர் அவற்றை சரிபார்த்த பிறகு திட்ட அனுமதி வழங்கப்படும் என்றும், இவ்விடத்தினை அனுபவிப்பவர்/ஒதுக்கப்பட்டவர்கள் மட்டுமே கட்டமைப்பு அமைக்க இயலும் மாற்றாக திட்ட அனுமதிக்கு விண்ணப்பிக்க இயலாது என்றும், குறிப்பிட்ட விதிமீறல் கட்டிடத்தின் உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர ஊரமைப்புச் சட்டம், 1971 பிரிவு 56(1) மற்றும் 57 R/W பிரிவு 85ன்படி 16.11.2023 அன்று பணி நிறுத்த தாக்கீது/அனுமதிக்கப்பட்ட திட்ட வரைபடத்தினை சமர்ப்பிக்குமாறு தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும், தொடர் நடவடிக்கையாக 11.12.2023 அன்று பூட்டி சீல் வைக்கும் தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் மண்டல அலுவலர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், மேற்கண்ட விதிமீறல் கட்டடத்தின் மீது தொடர் நடவடிக்கை இன்னும் ஒரு மாத காலத்தில் எடுக்கப்படும் என்று

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–4ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப்பொறியாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

மனுதாரர் மேற்கண்ட விதிமீறல் கட்டிடம் குறித்து இரண்டு வருடங்களுக்கு முன் புகார் மனு அளித்தும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் அலுவலர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது, விதிமீறி கட்டடப்படும் கட்டட உரிமையாளர்களுடன் கைகோர்த்து தங்களுடைய கடமையை சரிவர செய்யாமல் உள்ளார்கள் என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் மண்டல அலுவலரின் அறிக்கை விதிமீறி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்காமல் மண்டல அலுவலர்களின் கடமை தவறிய செயலை மூடி மறைக்கும் விதமாக உள்ளதாக இம்முறைமன்றம் கருதி அவ்வறிக்கையை நிராகரிக்கிறது.

2014–ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம், குறிப்பாக பிரிவு 7ல் குறிப்பிட்டுள்ள

<u>பிரிவு 7</u> The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

அதிகாரத்தின் அடிப்படையில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

மனுதாரர் மேற்கண்ட விதிமீறல் கட்டடம் குறித்து இரண்டு வருடங்களுக்கு முன் புகார் மனு அளித்தும், நடவடிக்கை எடுக்காமல், மனுதாரர் இம்முறைமன்றத்திற்கு மனு அளித்து, அதன் மீது இம்முறைமன்றம் விசாரணைக்கு உத்திரவிட்ட பின்னர் தமிழ்நாடு நகர ஊரமைப்புச் சட்டம், 1971ன் கீழ் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 4ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப்பொறியாளர் ஆகியோர் தங்கள் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு மேற்கண்ட விதிமீறல் கட்டிடத்தின் மீது ஒரு மாதத்திற்குள் தொடர் நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், விதிமீறி கட்டப்படும் கட்டடங்கள் மீது அரசாணை (நிலை) எண் 7, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:10.1.2023ல் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி உரிய சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து மண்டலங்களுக்கும் அறிவுரை வழங்கி சுற்றறிக்கை அனுப்புமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

This unconscientious delay of 3 years in taking statutory action against the delinquent building violator by the Corporation Zonal Officials concerned casts a deep slur on the image of the Greater Chennai Corporation betraying a stark reality of collusion, connivance and complicity besides, criminal dereliction upto the Assistant Commissioner himself who has abdicated his role as a reviewing, monitoring and mentoring authority. This kind of mindset and conduct would only promote building violations in the area with increasing volume of lawlessness in building structures by the law breaking individuals. The Greater Chennai Corporation Commissioner is directed to launch severe and visible disciplinary action against the delinquents responsible for this blatant lapse that would serve as a warning to the counter-parts in the other zones of the Corporations. A copy of this orders is being sent to Secretary in Municipal Administration and Water Supply department for information and necessary directions to the Greater Chennai Corporation to curb the menace of building transgressions.

2024–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 6–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. A. பிரேம்குமார்,
எண்.1/NA, 5வது தெரு, காசி விஸ்வநாதர் கோவில் குப்பம்,
எண்ணூர், சென்னை – 600 057.
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
மண்டலம் – 4, பெருநகர சென்னை மாநகராட்சி,
266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021.
4. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்